அறிவித்திருந்தால்

## சண்டைபிடித்தாவது மருந்து கொண்டுவந்திருப்பேன்

### - யாழ். அரச அதிபர்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் மருந்துத் தட்டுப்பாடு நிலைமை பற்றி நான் கொழும்பில் இருக்கும்போது எனக்கு அறிவித்திருந்தால் எப்படியாவது ஒரு சிறு பகுதியையேனும் கொண்டுவந்திருக்க முடியும்.

ஆனால் இங்கு இருந்து எனக்கு எதுவித முன் அறிவித்தலும் வரவில்லை என யாழ். அரச அதிபர் கூறினார்.

மேலும் யாழ். மாவட்டத்தின் மருந்துத்தேவையில் ஒரு பகுதி மருந்தையேனும் கொ

(4 ஆம் பக்கம் பார்க்க)

# அத்தியாவசியப் பொருள் விலைகள் வர்த்தக சங்கத்தினால் கட்டுப்பாடு

(நமது நிருபர்)

அத்தியாவசிய பண்டங்களுக்கு விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. பாவனையாளர்களின் நலனைக் கருத்திற் கொண்டு வர்த்தகர்களுடன் விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி நடத்திய கலந்துரையாடலில் பொருட்களுக்கான விலை நிர்ணயம் செய்யப்பட்டிருக்கின்றது.

சாதாரண நாட்களில் ரூபா 8,000 ஆக இருந்த லொறிக் கூலி தற்போது ஒரு இலட்சமாக அதிகரிக்கப்பட்டிருப்பதைக் கவனத்திற் கொண்டு விலைகள் நிர்ணயம் செய்யப்பட்டிருக்கின்றன.

வவுனியாவுக்கு உள்ளே கொண்டுவரப்பட்ட பொருள்கள் பல இடங்களில் களஞ்சியப்படுத்தப்பட்டு செயற்கையான தட்டுப்பாட்டை ஏற்ப

(4 ஆம் பக்கம் பார்க்க)

Registered as a News Paper in Sri Lanka பக்கங்கள் 04 விலை ரூபா 4-00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி PEOPLES DAILY

நாதம்: 01 தை (21 - 01 - 1991) திங்கட்கிழமை ஓசை: 337

## உண்மைகளை மறைப்பதற்கு வதந்திகளைப் பரப்புகின்றனர்

யாழ். மாவட்டத்தில் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள உலர் உணவு அட்டைகளை மீள் பரிசீலனைக்கு உட்படுத்தப்படுவதாக அறியமுடிகிறது. அண்மையில் மோசடியான முறையில் கணிசமான அட்டைகளை சில தனிப்பட்டவர்கள் தவறான வழிகளில் பெற்று பெரும் பணம் சம்பாதிப்பதற்கு முயற்சித்தபோது விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியினரிடையும் மெய்யுமாகப்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வல்வெட்டித்துறை கரையோரப்பகுதியில்

# விமானக் குண்டு வீச்சு

# 7பேர் பலி; 22பேர் காயம்!

## 10க்கு மேலான வீடுகள் தரைமட்டம்

## ஏவுகணை எதிர்ப்பு ஆயுதம் இஸ்ரேலுக்கு துருப்புகளுடன்

ஏவுகணைகளை எதிர்த்து அழிக்கக்கூடிய பேர்ச்சியாட் ஏவுகணைகளைவநேற்றுவிமான மார்க்கமாக அமெரிக்கா இஸ்ரேலுக்கு அனுப்பி வைத்தது. ஒருசில மணி நேரங்களின் இவை இஸ்ரேலில் உரிய இடங்களில் பொருத்தப்படும் என்று அமெரிக்க இராணுவ வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. அமெரிக்க ஆயுதப் படைகளின் தளபதி ஜெனரல் டேவிற் வழங்கிய தகவலில் மேலும் ஏவாயுதங்களை எதிர்க்கும் நவீன கருவிகள் விரைவில் அனுப்பி வைக்கப்படும்என்றுகூறினார்.

(4ஆம் பக்கம் பார்க்க)

## போர் நிறுத்தத்திற்கு பல தலைவர்கள் விருப்பம்

★ வளைகுடாப் போரை முடிவுக்குகொண்டுவர மொராக்கோ மன்னர் ஹசன் விருப்பம் தெரிவித்துள்ளார்.

★ போர்நிறுத்தம் வேண்டும் என ஜோர்டானிய மன்னர் ஹுசைனும் கேட்டுக்கொண்டிருக்கிறார்.

★ ஈராக்கிற்கு ஆதரவுதரும் அதேநேரத்தில் மூரிசானியா போர்நிறுத்தம் வேண்டுமென்று அரபு நாடுகளையும், இஸ்லாமிய நாடுகளையும் கேட்டுக்கொள்கிறது.

## வீரவணக்கம்

(வல்வெட்டித்துறை)

வல்வெட்டித்துறைக்கும் ஊரிக்காட்டிற்கும் இடைப்பட்ட கரையோரப் பகுதியில் சிறிலங்கா விமானப்படையினர் நேற்று மேற்கொண்ட கண்மூடித்தனமான விமானத் தாக்குதலில் ஏழுபேர் கொல்லப்பட்டனர். இருபத்திரெண்டிற்கு மேற்பட்டோர் படுகாயமடைந்தனர். பத்துக்கு மேற்பட்ட வீடுகள் தரைமட்டமாகின.

இத் துயரச் சம்பவம் பற்றித் தெரியவருவதாவது: நேற்று மாலை நான்கு மணிக்கும், 5.30 மணிக்கும் இறிலங்கா விமானப்படையின் மூன்று குண்டுவீச்சு விமானங்களும், நான்கு அவ்ரோ விமானங்களும், இரண்டு ஹெலிக்கொப்ரர்களும் வல்வெட்டித்துறை, ஊரிக்காட்டுப் பகுதியில் இரு தடவைகள் தாக்குதலை மேற்கொண்டன.

இத் தாக்குதலின்போது குண்டுவீச்சு விமானங்களில்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# வலி-வடக்கில் இரண்டுமணிநேர விமானத் தாக்குதல்

(தெல்லிப்பழை)

வலிகாமம் வடக்கில் சிறிலங்கா விமானப்படை விமானங்கள் நடாத்திய இரண்டு மணிநேரத் தாக்குதலில் 7 வீடுகள் பலத்த சேதமடைந்துள்ளன. நேற்று நண்பகல் 1.30 மணியிலிருந்து குப்பிளான் பகுதியைவட்டமிட்ட 3 பொம்மர்கள் அப்பகுதியில் 12 குண்டுகளைத் தள்ளின. இதில் இரண்டு குண்டுகள் வெடிக்காத நிலையில் விடுதலைப் புலிகளால் மீட்கப்பட்டன. இதனைத் தொடர்ந்து கட்டுவன், குரும்பசிட்டி, குப்பிளான், வசாவிளான் பகுதிகளை வட்டமிட்ட ஹெலி ஒன்று மக்கள் குடியிருப்புகள்மீது றொக்கற் மோட்டார் தாக்குதலையும், கலிபர் தாக்குதலையும் மேற்கொண்டது.

இத்தாக்குதல்களினால் குப்பிளான், குரும்பசிட்டி பகுதிகளில் ஏழு வீடுகள் பலத்த சேதமடைந்துள்ளன. இந்தப் பகுதிகளிலிருந்து மக்கள்பாதுகாப்புக்கருதி ஏற்கனவேவெளியேறியமையால் உயிர்ச்சேதங்கள் எதுவும் ஏற்படவில்லை.

இதனைத் தொடர்ந்து பலாலி முகாமிலிருந்து கட்டுவன், குப்பிளான், குரும்பசிட்டி, ஏழாலை, வடக்குப் புன்னாலைக்கட்டுவன், வசா

(4ஆம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சியிலும் குண்டு வீச்சு

(கிளிநொச்சி)

கிளிநொச்சிப் பகுதியில் இரண்டு குண்டுவீச்சு விமானங்கள் நேற்று முன்தினம் கடுமையான தாக்குதல் நடத்தின. இதனால் ஒரு கட்டடம் பலத்த சேதமுற்றது.

## விடத்தல்தீவில் குண்டு வீச்சு

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் உள்ள விடத்தல்தீவு பகுதியில் இரண்டு குண்டு வீச்சு விமானங்கள் குண்டுகளை வீசியதால் பல வீடுகள் சேதமுற்றன.

நேற்றுமுன்தினம் மாலை நாலுகுமுப்பது மணியளவில் விடத்தல் தீவில் வட்டமிட்ட இரண்டு குண்டுவீச்சு விமானங்கள் மாறிமாறி குண்டுகளை வீசின இதனால் மூன்றுவீடுகள் முற்றாக நொருங்கிப் போயின. ஏனைய ஆறுவீடுகள் சிறுசேதங்களுக்குஉள்ளாயின.

## பேச்சுவார்த்தை நடத்த ஏற்பாடு

(டில்லி)

இந்த மாதம் 28 ஆம் திகதி சிறிலங்கா வரவுள்ள இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் வி. சி. சுக்லவுடன் பேச்சுக்கள் நடத்த சிறிலங்கா அரசாங்கம் சகல ஏற்பாடுகளையும் செய்து வருகிறது.

இது குறித்து இந்திய வெளியுறவுத்துறை அதிகாரி ஒருவர் குறிப்பிடுகையில் மூன்று

(4 ஆம் பக்கம் பார்க்க)

## குருமன் காட்டு மோதலில் புலிகளால் ஆயுதம் மீட்பு

(வவுனியா)

முகாமின் முன் இருந்த காவல் அரண் ஒன்றிலிருந்து வெளியேறி வந்த இராணுவத்தினர் மீது புலிகள் தற்காப்புக்காக துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் ஓர் இராணுவ சிப்பாய் உயிரிழந்தார். ஏனையோர் காவலரணையும் விட்டுவிட்டு முகாமிற்குள் ஓடித்தப்பினர். ஆயுதங்களும் இறந்த இராணுவத்தினரின் சடலமும் புலிகளால் கண்டெ

(4 ஆம் பக்கம் பார்க்க)

## 'லவன்' 'நிக்சன்'

நேற்று முன்தினம் வவுனியா குருமன்காடு பகுதி காவலரணிலிருந்து வெளியேறிய இராணுவத்துடன் ஏற்பட்ட மோதலில் லவன் (தர்மலிங்கம் யோகராசா விளாத்திக்குளம்), நிக்சன் (கனேஸ் ஜெயதாசன் கண்டி வீதி ஓமந்தை) ஆகிய இரண்டு போராளிகள் வீரமரணம் அடைந்தவர். இவர்களுக்கு விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

## மிதக்கும் மூங்கில் வீடு

(நமது நிருபர்)

மணற்காட்டுப் பகுதி கடற்கரைப் பகுதியில் மூங்கில்

(4ஆம் பக்கம் பார்க்க)

…ய நாடுகளையும் கேட்டுக்கொள்கிறது.

★ போர்நிறுத்தம் இன்றைய கால கட்டத்தில் அவசியம் என ஈரானிய தலைவர்களும் கூறிவருகிறார்கள்.

★ ஈராக்மீது பன்னாட்டுப் படைகள் மேற்கொண்ட தாக்குதலில் 94 ஈராக்கியர் இறந்துள்ளதாக பாக்தாத் தெரிவித்துள்ளது.

இதில் 31 இராணுவத்தினரும் அடங்குவர் எனவும் தெரிவித்துள்ளது.

★ ஈராக்கிய விமானப்படையின் 700 விமானங்களில் 50 விமானங்கள் மட்டுமே சேதமாக்கப்பட்டதாக பிரிட்டிஷ் இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார். மிகுதியானவை பாதுகாப்பான இடங்களில் வைக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

★ ஈராக்கிற்கு ஆதரவாக சூடான், ஜோர்டான், அல்ஜீரியா ஆகிய நாடுகள் போரில் இறங்க வேண்டும் என லட்சக்கணக்கான மக்கள் அந்த நாடுகளில் கூடி ஆர்ப்பாட்டம் செய்துள்ளனர். சூடானில் இவ்வாறு லட்சக்கணக்கில் மக்கள் கூடியது இதுவே முதல்தடவை என அறிவிக்கப்படுகின்றது.

★ லெபனானில் பிரிட்டிஷ் வங்கிக்கட்டடம் ஒன்றில் குண்டு ஒன்று வெடித்ததனால் பெரும் சேதமேற்பட்டது.

★ பாகிஸ்தானில் இரையாக்கொக்கில் குண்டொன்று வெடித்ததில் ஐவர் மரணமடைந்தனர். பலர் காயமடைந்தனர். ஈராக்கிய ஆதரவாளர்களே இந்தக்குண்டை வைத்திருக்கலாம் எனக்கருதப்படுகின்றது.

★ அமெரிக்கா ஏவுகணை எதிர்ப்பு ஏவுகணைகள் வழங்க முன்வந்தது இஸ்ரேலுக்கு ஒரு விருப்பம்தரும் விடயமே என இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

★ மணிலாவில் வெடிகுண்டுடன் சென்ற ஓர் ஈராக்கியர் தவறுதலாக குண்டு வெடித்ததில் மரணமானார்.

★ வளைகுடாப் பகுதியில் அமைதி நிலையொன்றை காண்பதற்கு இந்திய உத்தியோகப்பற்றற்ற முறையில் முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. புதிய சமாதான யோசனை ஒன்றை முன்வைத்துள்ள இந்தியா, இதற்கு அணிசாரா நாடுகளின் ஆதரவைத் திரட்டும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது.

★ வளைகுடாப் பகுதியில் அமைதி நிலையைத் தோற்றுவிக்க உலகத் தலைவர்கள் தமது செல்வாக்கைப் பயன்படுத்த வேண்டும் என்று இந்தியப் பிரதமர் சந்திரசேகர் கோரியுள்ளார்.

★ சென்னை திருச்சி, திருவனந்தபுரம், பம்பாய் விமான நிலையங்களிலிருந்து கொழும்புக்கு மேற்கொள்ளப்பட்ட சகல போக்குவரத்து விமான சேவைகளையும், ஏர் இந்தியாவும், இந்தியன் ஏர்லைன்சும் நேற்றுமுதல் இடைநிறுத்தியுள்ளது. வளைகுடா நிலையால் எரிபொருள் சிக்கனத்திற்காக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாக சொல்லப்பட்டுள்ளது.

★ கைது செய்யப்பட்ட ஏழு அமெரிக்க விமானிகளை நேற்று பாக்தாத் தொலைக்காட்சி காட்டியது.

★ யுத்த கைதிகள் சர்வதேச நீதிகளுக்கு ஏற்ப நடத்தப்படுவார்கள் என சதாம்ஹுசைன் அறிவித்துள்ளார்.

## விளம்பரம்

**Second Handbook House**

பழைய புத்தகங்கள், கொப்பிகள், பேப்பர், கோழித்தீன் உறை, பித்தளை, செம்பு, போத்தல் வகைகள் வாங்கப்படும், விற்கப்படும். சேனாதிராசா, Second Hand Book House, 57, ஸ்ரான்லி வீதி, முரசொலி, இலங்கை வங்கிக்கு முன் லேன், யாழ்ப்பாணம். (B-1853)


### மண்ணெண்ணெயில்
## கலப்படம்

பண்டத்தரிப்பு சந்தைப்பகுதியில் விற்பனை செய்யப்படும் மண்ணெண்ணெயில் கலப்படம் செய்யப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த சில நாட்களாக இப்பகுதியில் விற்பனை செய்யப்படும் மண்ணெண்ணெயை வாங்கிய பலர் ஏமாற்றம் அடைந்துள்ளனர்.

இவ் எரிபொருளை விட்டு ஓடிய மோட்டார் வாகனங்கள் சிறிது தூரம் சென்றதும் தொடர்ந்து இயங்க மறுக்கின்றன. நீர் இறைக்கும் இயந்திரங்கள் செயற்படவில்லை. வீட்டு விளக்குகள் சில நிமிடங்கள் ஒளிர்ந்தபின் நூர்ந்துவிடுகின்றன. இப்பகுதியில் பலவர்ண நிறங்களில் இம் மண்ணெண்ணெய் விற்பனை செய்யப்படுவது குறிப்பிடத்தக்கது. (ச) (13)

## மகாராஷ்டிரா முதல்வர் இராஜினாமா

(பம்பாய்)

மகாராஷ்டிராவின் முதல் அமைச்சர் சரத்பவார் தமது பதவியை இராஜினாமா செய்துள்ளார் என ஏஜென்சி செய்திகள் தெரிவிக்கின்றன.

இராஜினாமாக் கடிதத்தை இவர் இந்திரா காங்கிரஸ் தலைவர் ராஜீவ் காந்தியிடம்


## UNIVERSITY GRANTS COMMISSION

*GELT & POP Programmes 1991 for University Entrants*

## POSTS OF PART TIME ENGLISH TEACHER

The University Grants Commission will conduct the General English Language Teaching and Practical Orientation Programmes for those who qualify to enter the Universities based on the Advanced Level exam held in 1989. It will consist of English teaching and work experience in their chosen fields and elsewhere, designed to make them more confident as they enter the University.

The English teaching in this programme will include the components of (a) the English Everyday Series, (b) An Integrated Course in English for the Advanced Level, (c) Literature / English for specific purposes.

The following categories of teachers with at least ten years experience are eligible to apply for the above posts.

1. English Medium graduates
2. English trained teachers.
3. Graduates with English as a subject for the degree.
4. Teachers with TESL and TEFL qualifications of any University or a Higher Institute of Education.
5. Retired English Teachers with any of the above qualifications and below 65 years of age may apply.

Teachers will be expected to take classes on weekday afternoons at regionally distributed centres. The course will be for a period of about six months and may involve about 50 hours of work per month.

All teachers selected will receive their letters of appointment from the University Grants Commission, and will be paid at UGC approved rates.

Applications prepared on 12" x 8" blank paper, using specimen given below, should be sent by Registered post undersigned on or before 08th February 1991. The letters and the district preferred should be noted on the top left corner of the envelope.

Secretary.
University Grants Commission,
20, Ward Place, Colombo 07.

### APPLICATION FORM

**Post of Part Time English Teacher**

1. Name :
2. Designation :
3. Age : 4. Sex :
5. Address : Home.
   Official:
6. District of residence :
7. Professional qualifications:
   (Attach photocopy of certificates)
8. Academic qualifications and subjects qualified in :
   (Attach photocopy of certificate of highest qualification)
9. Relevant experience and training (briefly) :


### ஈழநாதம் முதல் ஆண்டு நிறைவு
## போட்டிகளும் விதிமுறைகளும்

மக்கள் தினசரி ஈழநாதம் தன் முதலாவது ஆண்டு நிறைவைக் குறிக்கும் முகமாக கருத்துப் படப் போட்டி (Cartoon), கவிதைப்போட்டி, சிறுகதைப்போட்டி என்பனவற்றை நடாத்த முன் வந்துள்ளது. இப்போட்டிகளில் சமகால நிகழ்வுகளைப் பிரதிபலிக்கும் உள்ளடக்கங்கள் விரும்பி வரவேற்கப்படும்.

★ கருத்துப் படங்கள் (Cartoon) ★ சிறுகதை
★ கவிதை ★ வாசகர் கடிதங்கள்.

### போட்டியில் கலந்து கொள்ள கடைப்பிடிக்க வேண்டியவை.

★ படைப்புக்கள் யாவும் சமகால நிகழ்வுகளைச் சித்திரிக்கும் வண்ணம் அமைதல் வேண்டும்.

★ கருத்துப் படங்கள் 15செ.மீ x 12செ.மீ அளவுள்ள அட்டையில் கறுப்பு வெள்ளை கோட்டுப் படங்களாக அமைதல் வேண்டும்.

★ படைப்புக்கள் யாவும் தாளின் ஒரு பக்கத்தில், தெளிவான கை எழுத்தில் அல்லது தட்டச்சு செய்யப்பட்டதாக இருத்தல் வேண்டும்.

★ சிறுகதைகள் சுமார் 1500 சொற்களுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும்.

★ கவிதைகள் 30 வரிகளுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும்

★ வாசகர் கடிதங்கள் இதுவரை வெளியான ஈழநாதம் இதழ் பற்றிய விமர்சனப் பார்வையைக் கொண்டதாக அமைய வேண்டும்.

★ படைப்பாளரின் பெயர், முகவரி என்பன தனித் தாளில் எழுதப் படவேண்டும் என்பதுடன் படைப்பாளர்கள் தமது சொந்த ஆக்கம் என்பதை உறுதிப்படுத்த வேண்டும்.

★ ஆக்கங்கள், இதற்குமுன் பிரசுரமானவைகளாகவோ, வேறெங்கும் பிரசுரம் பெறுவதற்காக கையளிக்கப்பட்டவைகளாகவோ இருத்தல் கூடாது.

★ போட்டிக்கான ஆக்கங்கள் அனைத்தும் எதிர் வரும் பத்தாம் திகதிக்கு பிந்தாமல் 'ஈழநாதம்' அலுவலகத்திற்குச் சேர்ப்பிக்கப்படுதல் வேண்டும் எக் காரணம் கொண்டும் போட்டிக்கான முடிவுத் திகதி நீடிக்கப்பட மாட்டாது என்பதுடன், பிந்திக் கிடைப்பவை பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப் படவும் மாட்டாது.

அவர் இந்திரா காங்கிரஸ் தலைவர் ராஜீவ் காந்தியிடம் கையளித்திருப்பதாகவும் அந்தச் செய்தி தெரிவிக்கிறது.

கடைசியாகக் கிடைத்த செய்தியின்படி இராஜினாமாவை காங்கிரஸ் கட்சி ஏற்றுக்கொண்டதாகத் தெரிய வருகின்றது.

8. Academic qualifications and subjects qualified in :
(Attach photocopy of certificate of highest qualification)
9. Relevant experience and training (briefly) ;
10. Any other special qualifications :

I affirm the truth of the above particulars.

Signature:
Date :

(B. 1886)

படவும் மாட்டாது.

★ போட்டி முடிவுகள் யாவும் 17 - 02 - 1991 ஈழநாதம் தினசரியில் அறிவிக்கப்படும். முதலாண்டு நிறைவு நாளில் முதலாவது பரிசு பெறும் ஆக்கங்கள் பிரசுரிக்கப்படும்.

★ ஒவ்வொரு துறையிலும் தகுதியானது எனத் தேர்ந்தெடுக்கப்படுபவை ஈழநாதம் இதழ்களில் பிரசுரமாகும். முதல் மூன்று இடங்களையும் பெறும் ஆக்கங்களுக்கு முதலாண்டு நிறைவு நாளில் சிறப்புப் பரிசில்கள் வழங்கப்படும்.

ஆக்கங்கள் அனைத்தும் 'ஈழநாதம் ஆண்டு நிறைவுப் போட்டி' என கடிதஉறையில் வலது பக்கமேல் மூலையில் குறிப்பிட்டு;

ஆசிரியர்
ஈழநாதம்
31, மகேந்திரா வீதி,
யாழ்ப்பாணம்.

என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.


## நினைவு கூருகின்றோம்!

### ஜனவரி 21

1988ஆம் ஆண்டு தாண்டியடியில் இடம் பெற்ற மோதலில் வீரமரணமடைந்த

**2ஆம்லெப்.புலி** (இ. ஆனந்தன் - பொத்துவில்)

ஒட்டிசுட்டானில் இந்திய இராணுவத்துடனான மோதலில் வீரமரணமடைந்த

**2ஆம்லெப்.வின்சன்** (ப. ஜெயரூபன் - சரசாலை)

1990ஆம் ஆண்டு இந்திய இராணுவம் மற்றும் தேசவிரோத சக்திகளுடனான மோதலில் வீரமரணமடைந்த

**2ஆம்லெப். ஜெகன்** (க. அகிலன் - எழுதுமட்டுவாள்)
**பவான்** (து. ராஜேந்திரன் - கண்டி)
**அழகன்** (மு. ரவீந்திரன் - பளை)
**நரசிம்மன்** (ஜெ. விமல்ராஜ் - பரவைஷயூர்)

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

- விடுதலைப் புலிகள்
மக்கள் முன்னணி

(B-1887)

## 55ஆம் நாள் நினைவஞ்சலி

வீரவேங்கை

### வதனன்

கார்த்திகேசு
பாலேந்திரன்

(இந்திரன்)



ஜனனம் 30-05-1973 வீரமரணம் 28-11-1990

பண்பிலே தெய்வமானாய்,
பார்வையில் வீரனானாய்
கானலில் எழுந்து நிற்கும்
கற்பக கனியேயானாய்
பாரினில் உள்ளோர் பார்த்து
பரவசமடையும் பாலேந்திரனானாய்
ஈழத்தின் இளவலானாய்
இன்னுயிர் நீத்தாய் அந்தோ!
மின்னாமல் முழங்காமல் வந்த அழைப்பால்
உன் நாமம் எந்நாளும் வாழ்ந்திடும்
எம் கண்ணில் நீரோட நீ!
தியாகத்தின் தீபமானாய்
அன்னையுடன் தந்தையுமே
அன்புடனே வாழ்ந்த நிலம்
அன்னியரால் அழிந்திடாமல்
அண்ணன் அணியில் சேர்ந்து
இன்னுயிரை ஈய்ந்து
இம்மண்ணின் மைந்தனானாய்:

கருங்காலி,
காரைநகர்.

உன் பிரிவால் வாடும்
தாய், சகோதரி, சகோதரர்கள்.

(B- 1888)

## ராஜா காமென்ற்ஸ்

★ ராஜா காமென்ற்ஸ் ஸ்தாபனத்தாரின் நம்பிக்கைத் திறன்கூடிய தரமான றெடிமேட் ஆடைத்தினுசுகள் இன்றைய நவநாகரிக முறைகளில்

❋ ஆடவர் ❋ நங்கையர் ❋ மழலைகள்

★ அனைவரினதும் தேவைக்குகந்த வகையில் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

(வியாபாரிகளுக்கு விசேஷ கழிவு உண்டு)

விபரங்களுக்கு:

**யோகாஸ் புடைவை மாளிகை**
இல, 16, பெரியகடை.

**குமார் புடைவை மாளிகை**
முத்திரைச்சந்தி, நல்லூர்.

(B-1785)

## ★ சிந்தனைக்கு ★

மனித அறிவாற்றலை, மேதையின் சிகரங்களிலிருந்து மட்டுமல்ல, திறமையற்ற, இயலாமை எனும் படுகுழிகளிலிருந்தும் ஆராய்ந்து சிந்திக்க வேண்டும்.

— ஏ இ. ஹவுஸ்மன்

ஈழநாதம்

31, மகேந்திராவீதி யாழ்ப்பாணம். 21-01-1991
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025 - 2839 நிர்வாகபீடம்: 2208
த.பெ.எண் 05

# கையறு நிலையில் ஐ. நா.

வளைகுடாப் போர் பெரிதாகி வருகின்றது; அமெரிக்காவும் அதன் நேச அணியினரும் முன்னர் எதிர்பார்த்த மாதிரி போர் சில தினங்களுக்குள் முடிந்து விடுவதற்கான அறிகுறிகள் தென்படவில்லை. இதனை அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ் யுத்தம் ஆரம்பித்து மூன்றாம்நாள் பத்திரிகையாளருக்கு வழங்கிய பேட்டியே தெளிவுபடுத்துகின்றது. "யுத்தம் இலேசான விடயமல்ல, செலவு குறைவான ஒரு விவகாரமுமல்ல. முதல்நாள் வெற்றி குறித்து நாம் பெருமிதம் கொள்ள முடியாது" எனத் தெரிவித்ததில் இருந்தே புரிந்து கொள்ளலாம்.

மேலும் யுத்தம் எதிர்பார்த்ததைவிட பல நாட்கள், சிலவேளைகளில் மாதக்கணக்கில் நீடிக்கலாம் என அமெரிக்க இராணுவ வட்டாரங்களே குறிப்பிடுகின்றன. அதேவேளை ஈராக்கின் இராணுவ உள்ளார்ந்த வளத்தை தெளிவாகக் கணக்கிட முடியாது உள்ளது எனவும், குறைவாக அமெரிக்க கூட்டணியினர் கணக்கிட்டுவிட்டனர் எனவும் சில செய்தியாளர்களும், இராணுவவிற்பன்னர்கள் சிலரும் தெரிவித்துள்ளனர்.

இதனை வலியுறுத்துவதுபோல் வளைகுடாவில் தரித்துள்ள ஆறரை லட்ச பன்னாட்டுப் படையினர்களுடன் சேர்ந்துகொள்ள மேலும் இரண்டரை லட்ச படைவீரர்கள் சவூதி அரேபியாவிற்கு அனுப்பி வைக்க அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ் கட்டளை இட்டுள்ளார்.

அதேவேளை ஈராக் அறிவிப்புக்களும், நடவடிக்கைகளும் போரை மேலும் நீடிப்பதாகவே உள்ளது ஈராக்கைத் தாக்கியவர்கள் தண்டனை அனுபவிக்கும் வரை யுத்த நிறுத்தம் என்ற பேச்சிற்கே இடமில்லை என ஈராக்கின் வெளிவிவகார அமைச்சர் தாரிக் அஸிஸ் தெரிவித்துள்ளார். அதேவேளை இஸ்ரேல் மீதும் ஏவுகணைத் தாக்குதலை ஈராக் தொடுத்துள்ளது.

இந்த ஈராக்கின் ஏவுகணைத் தாக்குதலுக்கு இஸ்ரேலினால் பதில் தாக்குதல் நடத்தப்படும் என அறிவித்துள்ளது. போரின் போக்கில் மாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய இஸ்ரேலின்நடவடிக்கைகளை அமெரிக்க [illegible]

# "கள்ளச் சந்தைக்காரருக்கு ஒத்துழைக்க வேண்டாம்" - கோபி

போர்க்காலச் சூழ்நிலையைப் பயன்படுத்தி உணவுப் பொருள்களையும், எரி பொருள்களையும் பதுக்கிக் கள்ளச்சந்தையில் கூடிய விலையில் விற்கும்வியாபாரிகளுடன் பாவனையாளர்கள் ஒத்துழைக்க வேண்டாமெனவும், அப்படியான பதுக்கல் வியாபாரிகளை இனம் கண்டு விடுதலைப் புலிகளுக்கு அறிவியுங்கள் என தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் கிளிநொச்சி மாவட்ட அரசியல் பொறுப்பாளர் திரு. கோபி விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

போராட்டத்தைச் சாதகமாக்கிப் பொருள்களைப் பதுக்கிவைத்துக் கூடுதல்விலைக்கு விற்க வேண்டாமென்று தமிழீழ வர்த்தகர்களை வேண்டுகிறேன்.

வர்த்தகர்கள் அத்தியாவசியப் பொருள்களை நியாய விலையில் விற்று பொதுமக்களைப் பட்டினிச்சாவிலிருந்து பாதுகாக்க முன்வரவேண்டும்.

சிறு தானியங்களின் அறுவடை காலம் ஆரம்பித்துள்ள இவ்வேளையில் கமக்காரர்கள் தங்கள் உற்பத்திசெய்த சிறு தானியங்களைக் கூடியவரை சேமித்துவைத்து உணவுத்தட்டுப்பாடு ஏற்படும் வேளை அவற்றைப் பாவிக்க முன்வர வேண்டும்.

இலர் ஆடம்பரப் பொருள்களைக் கொள்முதல் செய்து வீட்டில்வைத்து அழகு பார்ப்பதற்காகத் தாம் உற்பத்தி செய்த பொருள்களைக் குறைந்த விலையில் விற்கிறார்கள். அது தவிர்க்கப்பட்டு ஒவ்வொரு வீட்டிலும் தானிய வகைகள் சேமித்து வைக்கப் படல் வேண்டும்.

வர்த்தகப் பெருமக்களே, போராட்ட வேளையில் பதுக்கலையோ, கள்ளச்சந்தையில் பொருள்களைக் கூடிய விலைக்கு விற்பதையோ தவிர்த்துக் கொள்ளுங்கள். கூடியவரையில்பொருள்களைநியாய விலையில் விற்பனை செய்யுங்கள். தமிழீழத்தில் உற்பத்தியாகும் எந்தவித உணவுப் பொருள்களையும் தமிழீழத்திற்குவெளியே எடுத்துச் சென்று விற்பனை செய்யாதீர்கள். அப்படிச்செய்வது எமது மக்களுக்கும், தமிழீழத்திற்கும் நாம் செய்யும் துரோகமாகும்;

இவ்வாறு அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (49)

# ஒன்பது லட்சம் ரூபா சுன்னாகத்தில் விநியோகம்

(சுன்னாகம்)

சுன்னாகம் தபாலகத்தில் கடந்த வாரம் ஒன்பது இலட்சம் ரூபா பணம் பல்வேறு கொடுப்பனவுகளுக்காகக் கொடுக்கப்பட்டது.

உள்நாட்டு, வெளிநாட்டு காசுக் கட்டளைகள், பிரிட்டிஷ் போஸ்ரல் ஓடர்கள் தேசிய சேமிப்பு வைப்பிலிருந்து பணத்தை மீளப் பெறுதல், சுருமப் பணம் ஆகிய கொடுப்பனவுகளுக்கு இத்தொகை பயன்படுத்தப்பட்டதாக சுன்னாகம் தபால் அதிபர் இ. திருநாவுக்கரசு தெரிவித்தார்.

குடாநாட்டின் ஏனைய தபாலகங்களில் மேற்படி கொடுப்பனவுகளைப் பெற முடியாதவர்களுக்கும் இப் பணத்தில் 75% ஆன தொகை வழங்கப்பட்டதாக அவர்தெரிவித்தார். கடந்த 6 மாதங்களாக மேற்படி கொடுப்பனவுகள் தடைப்பட்டிருந்தது தெரிந்ததே. அதேவேளை சுன்னாகம் தபால் அதிபர் இ. திருநாவுக்கரசு சுயவிருப்ப இளைப்பாறல் திட்டத்தின் கீழ் சேவையிலிருந்தும் இளைப்பாறினர். இவருடன் சுன்னாகத் தபால் நிலைய 4 உதவித் தபால் அதிபர்களும் 8 சிற்றூழியர்களும் மேற்படி திட்டத்தின் கீழ் சேவையிலிருந்தும் இளைப்பாறியுள்ளனர்.

## ஊர்காவற்றுறையில் ஷெல் தாக்குதல்

மக்கள் வாழும் குடிமனைகளை நோக்கி ஊர்காவற்றுறையில் முகாம் அமைத்துள்ள இலங்கை இராணுவத்தினர் ஷெல்களை ஏவிவருகின்றனர்.

சென்ற தைப்பொங்கல் தினத்தன்று இரவு ஆரம்பித்துள்ள இந்த ஷெல்தாக்குதல்கள் தொடர்ந்தும் இரவு வேளையானதும் அங்கிருந்து ஷெல்களை ஏவி வருவது வழக்கமாகிவிட்டது. அதனால் மக்களோ, பயப்பீதியினால் இரவு வேளைகளில் நித்திரையின்றி விழிப்பாக இருந்து வருகின்றனர். (14, 15)

## இடமாற்றம் ஆராயக் கூட்டம்

வன்செயல் காரணமாக வேறு மாவட்டங்களில் இருந்து யாழ். மாவட்டத்திற்கு இடம் பெயர்ந்து வந்திருக்கும் ஆசிரியர்களுக்கு யாழ் மாவட்டத்திலேயே இடமாற்றம் பெற்றுக் கொடுப்பது சம்பந்தமாக ஆராயும் விசேட கூட்டம் ஒன்று இன்று திங்கள் இழமை மாலை 4 மணிக்கு நல்லூரில் உள்ள தமிழர் ஆசி[illegible]

இஸ்ரேலினால் பதில் தாக்குதல் நடத்தப்படும் என அறிவித்துள்ளது. போரின் போக்கில் மாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய இஸ்ரேலின் நடவடிக்கைகளை அமெரிக்க கூட்டணியினர் விரும்பாவிட்டாலும் இஸ்ரேல் தாக்குதல் நடத்துவதை தடுப்பது தவிர்க்கமுடியாததாகிவிடும்.

அதேவேளை, ஈராக்கின் அண்டை நாடான ஜோர்டான் ஈராக்கிற்கெதிரான விமானத் தாக்குதலை வன்மையாகக் கண்டித்துள்ளதோடு ஈராக்கிற்கு ஆதரவாக அரபுலகைப் போரில் ஈடுபட வேண்டும் என அதன் பாராளுமன்றம் மூலம் கோரிக்கை விடுத்துள்ளது.

அதேவேளை உலகின் பல பாகங்களிலும் பல இலட்சக்கணக்கான மக்கள் போருக்கு எதிராகவும் ஈராக்கிற்கு ஆதரவாகவும் ஆர்ப்பாட்டங்களை நடத்தி வருகின்றனர். மேற்குலக நாடுகளில் நடக்கும் ஆர்ப்பாட்டங்களில் அநேகமானவை போரை நிறுத்தும் படியும், மூன்றாம் உலக நாடுகளில் நடப்பவை குறிப்பாக அரபு / இஸ்லாமிய நாடுகளில் நடப்பவை ஈராக்கிற்கு ஆதரவாகவும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அதேவேளை, உலகில் சில நாடுகள் இன்றும் சமாதானத்தை ஏற்படுத்தி விடலாம், போர் நிறுத்தம் ஒன்றை ஏற்படுத்தலாம் என முயற்சித்தும் வருகின்றன

இந்த நிலையில், ஐ நா. சபையின் செயலாளர் நாயகத்தின் செயற்பாடுகள் தான், இராஜதந்திரிகளுக்கும் ஏன் சாதாரணமக்களுக்கும் ஆச்சரியம் அளிப்பதாகவுள்ளது.

ஈராக்கிற்கு எதிராகப் போரை நடத்த "அமெரிக்காவிற்கு அனுமதி'' வழங்கிய ஐ நா. செயலாளர் போர் தொடங்கி ஒன்றரை மணி நேரம் வரையும் தனக்கு ஒன்றும் தெரியாது எனத் தெரிவித்தார். அதேபோன்று தற்போதைய நிலையில் ஐ நாவால் எதையும் செய்துவிட முடியாது என மூன்று நாள் போரின் பின் அறிவித்துள்ளார் அதாவது போருக்கு அனுமதி வழங்கிய ஐ நாவினால் போரை நிறுத்த முடியாது என்றால் ஐ நா ஏன் போருக்கான அனுமதியை வழங்கியிருக்க வேண்டும் இதனை உணராதவராக ஐ. நா. செயலாளர் இருந்திருக்க முடியாது.

மேலும், தாக்கப்படும் நாடு எதிர்த் தாக்குதலை நடத்த உரிமையுடையது என்பது ஐ நா. சாசனத்திற்கு உட்பட்டது என ஈராக் மீது இஸ்ரேல் தாக்குவதற்கு நியாயம் தேடுகிறார் ஐ நா செயலாளர். ஆனால் கடந்தகால வரலாற்றில் ஐ நா. தீர்மானங்களை உதாசினம் செய்வதில் முன்னின்ற நாடு இஸ்ரேல் என்பது எளிதில் மறக்கப்பட முடியாதது. அத்தோடு ஐ நாவில் இயற்றப்பட்ட கண்டனத் தீர்மானங்களில் அநேகமானவை இஸ்ரேலுக்கு எதிரானவை என்பதும், அவற்றிற்காக ஐ நாவில் கூடுதலான வீட்டோ அதிகாரத்தை அமெரிக்கா பாவித்தது என்பதும் சகலரும் அறிந்ததே.

இந் நிலையானது முதலாம் உலகப் போர் முடிவில் சமாதானத்திற்காக உருவான சர்வதேச சங்கம் அழிந்ததையும், இரண்டாம் உலகப் போர் உருவானதையும் நினைவுபடுத்துகின்றது.

வர்த்தகப் பெருமக்களே,

## ரயில் சேவைகள் ரத்து

(பட்னா)

இந்தியாவில் 45 நாட்க ளுக்கு தேவையான எரிபொருள் கையிருப்பில் இருப்பதாக பிரதமர் திரு. சந்திரசேகர் கூறியுள்ளார். வளைகுடா நெருக்கடியினால் எரிபொருளைச் சிக்கனப்படுத்தும் முகமாக இந்தியா 41 நீண்டதூர ரயில்களை ரத்துச் செய்துள்ளது. உள்ளூர் விமானப்போக்குவரத்துகளும் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

இந்திய ஜனாதிபதி வெங்கட்ராமன் தமது சுற்றுப்பயணங்களை ரத்துச் செய்துள்ளார்.

...ரியா சங்கப் பணிமனையில் நடைபெறவுள்ளது.

## நெற்செய்கை பாதிப்பு

வன்னியில் பெய்து வரும் கடும் மழையையடுத்து நெல் அறுவடை சிறுதானிய வேளாண்மைகள் பாதிப்படைந்து வருகிறது.

நெல் அறுவடைக் காலங்களில் கடும் மழை பெய்து வருவதால் அறுவடை வேளாண்மை பாதிக்கப்பட்டு வருவதுடன் தோடு, வெங்காயம், உழுந்து, மற்றும் சிறு தானிய விவசாயமும் பாதிப்படைந்துள்ளதனால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர். (8)

## வளைகுடாவிற்கு மேலும் இரண்டரை லட்சம் துருப்புகள்

இஸ்ரேல் மீது ஈராக் மேற்கொண்ட இரண்டாவது சுற்று ஏவுகணைத் தாக்குதலைத் தொடர்ந்து அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ்புஷ் மேலும் இரண்டரை லட்சம் படைகளை வளைகுடாவிற்கு அனுப்பப்பணித்துள்ளார். அவர்களை விமானம் மூலம் கொண்டு செல்வதற்கான அவசரநிலை அறிவிக்கப்பட்டுள்ளது. இதே வேளை வளைகுடாப் பகுதிக்கு படைக்கான கருவிகளைக் கொண்டு செல்லவிமானங்களை அளித்து உதவுமாறு 20 வர்த்தகவிமான சேவை நிறுவனங்கள் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளன. பாதுகாப்புத் துணைச் செயலர் செனி இதற்கான உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

## அவுஸ்திரேலியாவில் போருக்கு எதிரான ஆர்ப்பாட்டம்

உலகின் பல பாகங்களில் நேற்று யுத்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களும், ஊர்வலங்களும் இடம் பெற்றன. அவுஸ்திரேலியாவில் முக்கிய நகரங்களில் பாரிய அமெரிக்க எதிர்ப்பு ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள் இடம்பெற்றதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

அல்ஜீரியாவில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டமொன்றில் ஒரு மில்லியனுக்கும் கூடுதலானவர்கள் கலந்துகொண்டு அமெரிக்காவிற்கு எதிராகவும், ஈராக்கிற்கு ஆதரவாகவும் கோஷங்களை எழுப்பினர். மிகவும் உணர்ச்சிபூர்வமாக இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது லிபியாவில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்திலும் இலட்சக்கணக்கானோர் கலந்து கொண்டு ஈராக்கை ஆதரித்துக் கோஷம் எழுப்பினர்.

## லித்வேனியா குறித்து விரைவில் கருத்துக் கணிப்பு

(மொஸ்கோ)

லித்வேனியக் குடியரசு குறித்த கருத்துக் கணிப்பு வெகுவிரைவில் நடைபெறும் என லித்வேனியப் பாராளுமன்றம் தெரிவித்துள்ளது.

கடந்த வருடம் லித்வேனியா அறிவித்த குடியரசுப் பிரகடனம் குறித்தே இந்த கருத்துக் கணிப்பு நடைபெறவுள்ளதாக லித்வேனியத் தலைவர் அறிவித்துள்ளார்.

இதனிடையே அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ்புஷ் அமைதி வழியிலும் ஜனநாயக ரீதியிலும் இந்தப் பிரச்சினை தீர தாம் உதவி செய்வதாக லித்வேனியத் தலைவருக்கு தெரிவித்திருக்கிறார்.

## பிரிட்டிஷார் வெளியேற்றம்

ஈராக்கினால் டெல் அவிவ் தாக்கப்பட்டதைத் தொடர்ந்து அங்கு வசித்து வந்த பிரித்தானியர் தாயகம் திரும்புகின்றனர்.

தாயகம் திரும்புவோர் செய்தியாளர்களுக்குக் கூறும் போது "இன்னும் ஒரு ஏவுகணையைச் சதாம் அனுப்பினால் பிரித்தானிய மக்களின் பயணம் மேலும் தொடரும்'' எனத் தெரிவித்தனர்.

# விமானக் குண்டுவீச்சால் ஆஸ்பத்திரி முற்றாக சேதம்

(வவுனியா)

விளாத்திக்குளம், இரணை இலுப்பைக்குளம் பகுதியில் சிறிலங்கா விமானப்படையைச் சேர்ந்த ஆறு விமானங்கள் குண்டுகளைப் போட்டதால் வைத்தியசாலை முற்றாகச் சேதமடைந்ததுடன், அரிசி ஆலை, பலநோக்குக் கூட்டுறவுச்சங்கக் கட்டடம், கடைகள் உட்பட பல கட்டடங்கள் நாசமாயின; ஒன்பது பசுமாடுகளும் உயிரிழந்தன.

நேற்றுக்காலை ஒன்பது மணியளவில் வவுனியா மாவட்டத்தில் உள்ள இரணை இலுப்பைக்குளம் சந்தி, விளாத்திக்குளம் ஆகிய பகுதிகளில் இரண்டு 'மாச்செட்டி' ரக குண்டு வீச்சு விமானங்களும் இரண்டு அவ்ரோ விமானங்களும் குண்டுகளை மாறிமாறி போட்டன. இந்த நான்கு விமானங்களுக்கும் இரண்டு ஹெலிக்கொப்டர்கள் வட்டமிட்டு தலைமை தாங்கின. இடையிடையே ஹெலிக்கொப்டர்களிலிருந்தும் துப்பாக்கி வேட்டுக்களும் ரொக்கட் மோட்டார் தாக்குதலும் மேற்கொள்ளப்பட்டது.

குண்டு வீச்சுவிமானங்கள் அங்கு இருந்த வைத்தியசாலையை இலக்குவைத்துத் தாக்கியதால் அந்த வைத்தியசாலை முற்றாகச் சேதமடைந்ததுடன் வைத்தியசாலை மருந்துக் களஞ்சியத்திலிருந்த மருந்துப்பொருள்களும் வைத்தியசாலை உபகரணங்கள், தளபாடங்கள் என்பனவும் முற்றாக நாசமாயின. இந்த தாக்குதலில் வைத்தியசாலைக்குள் இருந்த பொது மக்கள் ஏற்கனவே பாதுகாப்பு தேடிக்கொண்டதால் எதுவித உயிர்ச்சேதமும் ஏற்படவில்லை.

இரணை இலுப்பைக்குளம் சந்தியில் சிலமணிநேரம் மாறி மாறி விமானங்கள் குண்டுகளை வீசியதில் ஓர் அரிசி ஆலையும் அதன் அருகே இருந்த மூன்று கடைகளும் சேதமாயின. மேலும் குண்டுகள் வீசப்பட்டபோது பஸ் நிலையத்தின் அருகில் இருந்த ஒன்பது கடைகள் சேதமாயின அத்துடன் ஏ.பி.சி கட்டடமும் கே.வி.எஸ். கட்டடமும் எம்.பி.சி.எஸ் கட்டடமும் முற்றாக பகிரசமாயின.

இத்தாக்குதல்களின் போது வீதியால் சென்று கொண்டிருந்த ஒன்பது பசுமாடுகள் துடிதுடித்து உயிரிழந்தன.

# தானும் உண்டு, மகளுக்கும் நஞ்சுக்காய் கொடுத்த தந்தை

(நல்லூர்)

தனது குழந்தைக்கு நஞ்சுக்காய்களை உண்ணக் கொடுத்த தந்தை தானும் அக்காய்களை அருந்திவிட்டு காப்பாற்ற வருபவர்களை தடுக்க வெட்டுக் கத்தியுடன் காத்திருந்தாராம்.

இச்சம்பவம் வியாழக்கிழமை யன்று அளவெட்டியில் இடம் பெற்றுள்ளது. சின்னத்தம்பி ரவீந்திரன் என்னும் நாற்பது வயதான வாலிபரே இவ்வாறு தனது குழந்தையான தர்மினி (3 வயது) என்பவருக்கு நஞ்சுக்காயை உண்ணக் கொடுத்துடன் தானும் நஞ்சுக் காய்களை உண்டவராவார்.

இவர் தற்போது சங்கானை வைத்தியசாலையிலும், இவரது குழந்தை யாழ் போதனா வைத்தியசாலையிலும் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

# ஒரு லீற்றர் மண்ணெண்ணெய் 40 ரூபாவாக விற்பனை

(நல்லூர்)

மண்ணெண்ணெய் நேற்று மாலை இன்றைய சந்தை விலையிலும் பார்க்க மலிவு விலையில் விற்பனையாகியது. திருநெல்வேலிக் கடையொன்றில் ஒரு லீற்றர் மண்ணெண்ணெய் ரூபா 40க்குப் பாவனையாளருக்கு வழங்கப்பட்டது. இன்று அதன் விலை இன்னும் இறங்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## சங்காபிஷேகம்

கொழும்புத்துறை கிழக்கு ஆதியம்பதி ஸ்ரீ சந்திரசேகரர் விநாயகர் ஆலய வருடாந்த சங்காபிஷேகம் நாளை (செவ்வாய்க்கிழமை) காலை ஒன்பது மணிக்கு ஆரம்பமாகவுள்ளது. (34)

## உண்மைகளை

பிடித்துள்ளனர் இந்த நிலைமையைப் பயன்படுத்தி தாம் விட்ட தவறுகளை மக்கள் மத்தியில் இருந்து மறைப்பதற்காக உண்மையற்ற வதந்திகளை பரப்பி வருகிறார்கள் விடுதலைப்புலிகள் மக்கள்முன்னணியினர் உலர்உணவு அட்டைகளை பரிசீலிப்பதற்காகவோ அல்லது [illegible] மக்[illegible] சிரமங்களுக்குள்ளா[illegible]

## வலி-வடக்கில்

விளான், ஏழாலைப்பகுதிகளை நோக்கி தொடர்ச்சியான ஆட்டிலறி ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது இதனால் ஏற்பட்ட சேதவிபரங்கள் தெரியவில்லை.

## சண்டைபிடித்தாவது

ண்டுவரமுடியாது போனதை யிட்டு அவர் கூறும்பொழுது கொழும்பில் இருந்தபொழுது எனக்கு இவ்விடயம் குறித்து தகவல் எதுவும் தெரிவித்திருந்தால் எடுத்து வரும் கப்பலில் யாழ். மாவட்டத்திற்குத் தேவையான மருந்துப் பொருள்களை கொழும்பு அதிகாரிகளுடன் சண்டை பிடித்தாவது எடுத்து வந்திருப்பேன்

# தரைப்படை சந்திப்பிலேயே வெற்றி தோல்வி தெரியும்

அமெரிக்கா மற்றும் பன்னாட்டு விமானங்களின் போர் நடவடிக்கை போரின் காலத்தை குறுக்கலாமே தவிர போரின் முடிவை நிர்ணயித்துவிட முடியாதென பிரான்ஸின் பாதுகாப்பு அதிகாரி ஒருவர் குறிப்பிட்டார்.

வாராந்த பத்திரிகை ஒன்றிற்கு பேட்டியளித்த அந்த அதிகாரி தமது பெயரை வெளியிட மறுத்து விட்டார்.

நீண்ட காலமாக போர்ப் பயிற்சி பெற்ற ஈராக் இராணுவத்தை பன்னாட்டுப் படைகளின் தரைப்படை நேருக்கு நேராக சந்திக்கு போதுதான் போரின் வெற்றி தோல்வி தீர்மானிக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

## பாடசாலைகள் மூடப்பட்டன

இஸ்ரேலில் பாடசாலைகள் அனைத்தும் மறு அறிவித்தல் வரை கால வரையறையின்றி மூடி வைக்கப்பட்டுள்ளதாக இஸ்ரேலிய தொலைக்காட்சிச் செய்தியில் அறிவிக்கப்பட்டது.

## ஏவுகணை

வளைகுடா யுத்தத்திலிருந்து இஸ்ரேலை விலக்கி வைக்க அமெரிக்கா விரும்புகிறது. அதனால் ஈராக்கின் ஏவுகணைத் தாக்குதலில் இருந்து இஸ்ரேலைப் பாதுகாத்துக் கொள்ளும் தந்திரமாக அமெரிக்கா ஏவுகணைகளையும், அவற்றைச் செயற்படவைக்கும் இராணுவ அணி ஒன்றையும் அனுப்பி வைத்துள்ளது.

வளைகுடா யுத்தம் நேற்று 4ஆவது நாளாக நடைபெறுகையில் இஸ்ரேல் ஈராக்கிற்கு பதிலடி கொடுக்காது என்று நம்பிக்கையிலேயே அவற்றைச் செயற்பட வைக்கும் இராணுவத்தினரையும் அனுப்பியுள்ளது.

## விமானக் குண்டுவீச்சு

இருந்து நான்கு குண்டுகள் வீசப்பட்டன. அவ்ரோவில் இருந்து 13 குண்டுகளும், ஹெலிகொப்ரரில் இருந்து 15 மோட்டார் ஷெல் தாக்குதலும் இடம்பெற்றன.

குடியிருப்புக்களை இலக்குவைத்து தாக்குதல் இடம் பெற்றதினால் பொதுமக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டனர். அதேவேளை விமானத்[illegible]

## குருமன்காடு

டுக்கப்பட்டது.

மேற்படியுத்தம் நேற்று முன்தினம்காலை ஆறுமுப்பது மணியளவில் வவுனியா மாவட்டத்தில் உள்ள குருமன் காடு இராணுவமுகாமில் இடம் பெற்றது.

இந்தச் சம்பவம் பற்றி விரிவாக தெரியவருவதாவது குருமன் காடு இராணுவமுகாமின் காவல் அரணிலிருந்து வெளியேறி வந்த இராணுவத்தினர் கடுமையான தாக்குதலை மேற்கொண்டனர்.

தற்காப்பிற்காக புலிகளும் இவர்களை எதிர்த்துதுப்பாக்கி வேட்டுகளை தீர்த்த போது ஒரு சிறிலங்கா இராணுவ சிப்பாய் ஸ்தலத்திலேயே உயிரிழந்தார்.

இராணுவத்தினர் அந்த காவலரணிலிருந்து ஓடிவிட்டதைத் தொடர்ந்து அங்கு சென்று பார்த்த விடுதலைப் புலிகள் ஓர் இராணுவ சிப்பாயின் உடல் இருக்க கண்டனர் அத்துடன் ரீ 56-2 ரக துப்பாக்கி ஒன்றும் அதன் மகசீன்கள் மூன்றும் ஏ.கே. எல்.எம்.ஜீ. ரக மகசீன்கள் மூன்றும் ஏ.கே. எல்.எம் ஜீ லிங் இருநூறும் ஐ எம். ரக ரவைகள் இருநூற்றிஐம்பதும் கண்டெடுத்தனர்.

இந்த மோதலில் இரு போராளிகள் வீர மரணமடைந்துள்ளனர்.

வி. பார்வதி (50) கரவெட்டி, ஆர். ஜெயராணி (28) வல்வெட்டித்துறை, தி. வனஜா (56) வல்வெட்டித்துறை, இ. புஸ்பராசா (22) முல்லைத்தீவு, சி. செல்வன் (45) மாறாங்கணை, ம. பரமேஸ்வரி (54) தெணியம்பை, போ. பாலசுப்பிரமணியம் (64) வல்வெட்டித்துறை, திருமதி த. நவரத்தினம் (61) அகோவீவல[illegible]

சிரமங்களுக்குள்ளாக்கும் எந்தச்செயற்பாட்டையோ செய்யவில்லை. என்பதை மக்களுக்குத் தெரிவிப்பதாக யாழ் மாவட்ட மக்கள் முன்னணியினர் அறிக்கையொன்றை விடுத்துள்ளனர்.

தெரியவில்லை.

இவ்விமானத் தாக்குதல்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கும் போது பலாலியில் அவ்ரோ வை-12 ரக விமானங்கள் பல தடவைகள் தரையிறங்கிச் சென்றன. (ச)

# மரண அறிவித்தல்

## திருமதி செல்லம்மா வேலுப்பிள்ளை

காரைநகர் மணல்பிட்டியை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்டவரும் காலம் சென்ற அப்புத்தளை பிரபல வர்த்தகரான A. S வேலுப்பிள்ளையின் அன்பு மனைவி செல்லம்மா 18. 1. 1991 இல் சிவபதமடைந்தார்.

இவர் பரந்தாமன் (அப்புத்தளை பிரபல வர்த்தகர்) பத்மாவதி, பராசக்தி, பரமேஸ்வரி, பவானி ஆகியோரின் பாசமிகு தாயாரும், புஸ்பாதேவி, கணபதிப்பிள்ளை, நமசிவாயம், வாமதேவன், சோமசுந்தரம் ஆகியோரின் அன்புக்கினிய மாமியும், க. கணேசலிங்கம், க. புஸ்பராணி, க. தவராணி, ப. துவாரகன், ப. தர்சிகா, ப. குகதர்சினி, ப. சுகிர்தன், ந. இந்திரா, ந. கண்ணன், ந சிவரூபி, வா பாலதர்சினி, வா. பிரியதர்சினி ஆகியோரின் ஆருயிர்ப் பேர்த்தியுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் 21.1.91 இன்று திங்கட்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் காரைநகர் சாம்பல் ஓடை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:-

இல. 45 குமாரசாமி வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

புஷ்பா அன் கோ

(R-1044)

வது எடுத்து வந்திருப்பேன் என்று கூறினார். (லோ)

**மிதக்கும்**

வீடொன்று கரை ஒதுங்கியுள்ளது. மூங்கிலினால் வீடு போன்ற அமைப்புடைய இந்த மிதக்கும் வீடு பெரும்பாலும் தென்கிழக்காசிய நாடுகளிலேயே பயன்படுத்தப்படுவது குறிப்பிடத்தக்கது.

**பேச்சுவார்த்தை**

தான் பயணம் மேற்கொண்டு செல்லும் வி. இ. கல்லா தமிழீழ விடுதலைப்புலிகளின் நிபந்தனையற்ற யுத்த நிறுத்தம் பற்றியும் இனப்பிரச்சினை குறித்தும் பேசுவார் என்றும் இது குறித்து நிகழ்ச்சி நிரல் ஒன்று கொழும்பிற்கு அனுப்பியுள்ளதாகவும் தெரிவித்தார்.

பொதும் பாதிக்கப்பட்டனர்.

அதேவேளை விமானத் தாக்குதலுக்கு இடைப்பட்ட நேரங்களில் கடற்பரப்பில் தரித்து நின்ற பீரங்கிப் படகுகளிலிருந்தும் சரமாரியாக பீரங்கித் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. இத் தாக்குதல்கள் 4 45 மணியில் இருந்து 5.30 வரையும் மேற்கொள்ளப்பட்டன.

நேற்றைய விமானக் குண்டு வீச்சில் கொலைப்பட்ட ஏழு பேரில் மூவர் து. ரஞ்சனாதேவி (24) வல்வெட்டித்துறை, தி. நவரத்தினம் (4) தோப்புக்காடு காரைநகர், இ. தில்லையம்பலம் (60) ஆதிகோவிலடி என்போரென அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

மேலும் க. ராஜேஸ்வரி (50) வல்வெட்டித்துறை, வி. இரத்தினராசா (21) கரவெட்டி,

துறை, திருமதி த. நவரத்தினம் (61) ஆதிகோயிலடி வல்வெட்டித்துறை, இ. அறிவழகன் (20) ஆதிகோயிலடி, ம. ஜெனி (16) ஆதிகோயிலடி, ஞ. ஞானவேல் (54) வல்வெட்டித்துறை, வேலும் மயிலும் ரஞ்சனதாஸ் (33) நெடியகாடு, மு. புனிதலிங்கம் (31) பருத்தித்துறை, நா. துரைராசா வல்வெட்டித்துறை, ஏ. செல்வமனோகரன் (18) வல்வெட்டித்துறை, ம. கோற்கடமூர்த்தி (63) வல்வெட்டித்துறை, திருமதி சிவனேசன் (38) வல்வெட்டித்துறை, க. சிவசுப்பிரமணியம் (26) வல்வெட்டித்துறை மற்றும் உயிரிழந்த காஞ்சனாதேவியின் சகோதரிகளான இ. கமலாதேவி, (34) இ. சரோஜினிதேவி ஆகியோர் படுகாயமடைந்துள்ளனர்.

**அத்தியாவசியப்**

டுத்தி இரக்கமற்ற முறையில் இடம்பெறும் கொள்ளை லாபம் சம்பாதித்தலை தடுப்பதற்கே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக யாழ். மாவட்ட வர்த்தக சங்கம் தெரிவித்துள்ளது.

மேலும் லொறியில் பொருள்களை ஏற்றி வருவோர் சில்லறை வியாபாரிகளுக்கு நேரடியாக அதிகரித்த விலைகளில் பொருள்களை விற்பதே பொருள் விலை ஏற்றத்தின் முக்கிய காரணியாக இருக்கலாம் எனப் பொதுவாக நம்பப்படுகிறது.

அதேவேளை வியாபாரிகள் பண்டங்களைக் கொள்வனவு செய்யும்போது பற்றுச்சீட்டுப் பெறவேண்டும் எனவும், இதில் விற்பவரை அடையாளம் காணக்கூடியதாக விபரங்களும். கொழும்பில் பொருள்களின் விலையும் தவறாது குறிப்பிட்டு இருத்தல் வேண்டும் எனவும் கோரப்பட்டுள்ளது.

அறிவித்த விலைகளுக்குப் பொருள்களை விற்பனை செய்ய முடியாதவிடத்து எவரும் பண்டங்களைக் கொள்வனவு செய்யக்கூடாது எனவும் யாழ் மாவட்ட வர்த்தக சங்கம் அறிவித்துள்ளது.

### யாழ். மாவட்டத்திற்கான அத்தியாவசிய பொருள்களின் விலைகள்

| பொருள்களின் பெயர் | கொழும்பில் விலை | ஏற்று கூலி | முடிவு விலை | மொத்த விலை | சில்லறை விலை |
|---|---|---|---|---|---|
| மாவு | 13. 00 | 10 00 | 23. 00 | 25. 00 | 27. 00 |
| சீனி | 24. 00 | 10. 00 | 34 00 | 36. 00 | 38. 00 |
| ம. எண்ணெய் | லீ. 12 50 | 10. 00 | லீ. 22.50 | லீ. 25.00 | லீ. 30. 00 |
| தே. எண்ணெய் | லீ. 24.00 | 10 00 | லீ. 34.00 | லீ 36 50 | லீ. 40. 00 |
| சன்லைட் | 04. 75 | 01. 50 | 06.25 | 07 25 | 08. 25 |
| சர்க்கரை | 24 00 | 10 00 | 34.00 | 36. 00 | 38. 00 |

இந்த விலைகளுக்கு மேல் செலுத்தி பொருள்களைப் பெறவேண்டாம் என பாவனையாளர்கள் கேட்கப்பட்டுள்ளனர். (மு)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31 ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1991 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 21 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.